**கங்க இஹல கோரலை பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கங்க இஹல கோரலை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கங்க இஹல கோரலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 103,625 ஆன நீர் வைப்புக்கள் மீதிகளுக்குரிய பதிவேடுகள் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமை யால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சீர் செய்து கொள்வதாக. | மீதியை உறுதிப் படுத்துவதற்கு தேவையான பதிவேடுகள், அட்டவணைகள், கோவைகள் பேணி செல்லப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| | விதி 59 | ஒவ்வொரு சபை பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற கைத்தொழில்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது கணிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | கணிப்பீடு உரிய காலப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டு வியாபாரங்கள் இனங்காணப் பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2020 முதல் 2024 யூன் வரை பொது வைப்புக்கள் உள்ள ரூபா 5,786,711 பெறுமதியான காலப் பகுதிக்குரிய 45 வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |
| **(இ)** | 2016 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1955/07 ஆம் இலக்க அதிவிஷேட வர்தமானியில் வெளியிடப்பட்ட விளம்பர அறிவித்த தொடர்பான உப உறுப்புரையின் 02 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 117,763 ஆன 32 விளம்பர பதாதைகளில் இருந்து பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | உப உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,288,704 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 23,849,287 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2024 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2024 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2024 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,882,520 | 3,950,144 | 3,551,701 | 1,821,627 | 5,982,520 | 2,936,972 | 3,151,859 | 1,423,184 |
| (ii) | வாடகை | 8,272,520 | 10,470,099 | 9,783,221 | 2,357,126 | 20,937,500 | 6,653,946 | 6,392,400 | 1,670,248 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,290,000 | 1,363,242 | 1,300,242 | 103,500 | 725,100 | 180,000 | 184,500 | 40,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 38,571,500 | 43,684,672 | 47,084,668 | 28,769,224 | 62,673,000 | 32,685,162 | 33,362,273 | 32,169,220 |
| | மொத்தம் | 52,016540 | 59,468,157 | 61,719,832 | 33,051,477 | 90,318,120 | 42,456,080 | 43,091,032 | 35,303,152 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| **வீதவரி**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,558,388 வீதவரி நிலுவையொன்று இருந்ததுடன் அதில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 60 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 597,646 ஆன நிலுவையொன்று காணப்பட்டது. இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை**<br>சபைக்கு சொந்தமான 14 கடைகளில் இருந்து 03 ஆண்டுகளுக்கு முன் இருந்து வரும் ரூபா 1,674,880 ஆன நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 477,166 தொகையும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 26,605,530 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | - மேற்படி - | நீதிமன்ற தண்டப்பண வருமானம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் பெற்றுக்கொள்ளபட வேண்டும். |
| (ii) | **முச்சக்கர வண்டி நிறு கட்டணங்கள்**<br>மீளாய்வாண்டின் ஜனவரி 1 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 1,451,730 ஆன நிலுவை மீறி ஒன்று காணப்பட்டதுடன் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது ரூபா 1,396,830 ஆக இருந்தது இதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 27 நபர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 661,340 ஆன நிலுவை மீதியொன்ன்று இருந்தது எதிர்வரும் எதிர்வரும் | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 பெப்ரவரி 27 ஆந் திகதி ஓட்ட குறிப்புக்கள் மற்றும் மைலோ மானி பௌதீக பரிசோதனையின் போது கெப் வண்டி ஒன்றின் மைலோ மானியின் பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூரம் 262779 கிலோமீட்டர் ஆக இருந்ததுடன் ஓட்டக் குறிப்பின் பிரகாரம் அத்திகதியில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூரம் 267797 கிலோமீட்டர் ஆக இருந்ததால் 5018 கிலோமீட்டர் ஓட்டக் குறிப்புகளில் கூடுதலாக உள்ளடக்கப்பட்டு ரூபா 227,601 ஆன 627 லீட்டர் எரிபொருள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பாடுகளை மேற்கொள்வதாக. | .இடம்பெற்ற நட்டத்தை அறவிட வேண்டியதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான முறைகேடுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட வேண்டியதுடன் வாகன முறைகேடு தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற் கொண்டு பொறுப்பான தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் 2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 293 கட்டிட | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | குடியிருப்பிற்காக பய்ன்படுத்தப்படுீன்ற கட்டிடங்களுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களுக்காக இணக்க சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 06 கணக்குகளின் மொத்தம் ரூபா 23,271,558 ஆக இருந்ததுடன். அதில் 1 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 5,560,195 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகளின் மொத்தம் ரூபா 1,467,290 ஆகவும் இருந்தது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகள் அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்குகளின் மொத்தம் ரூபா 28,551,235 ஆக இருந்ததுடன். அதில் 1 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 2,739,305 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகள் ரூபா 428,170 ஆகவும் இருந்தது. | விரைவில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்தல் வேண்டும். |
| (ஈ) | சபைக்குரிய அத்கால விளையாட்டரங்கு அருகில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடம் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமல் மற்றும் வாடகை அறுவிடப்படாமல் 2021 நவம்பர் 01 ஆம் திகதி முதல் அத்கால புதிய பொலிஸ் நிலையத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு உடன்படிக்கை செய்து வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 செப்டம்பர் 28 ஆம் திகதி கொள்வளவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,494,800 ஆன கழிவுப்பொருள் எரிவு இயந்திரம் ஓராண்டு காலமாக விளைவற்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக எரிவு இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 இன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டுக்கு ஒருமுறை சொத்துக்கள் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2022 நவம்பர் 23 ஆந் திகதி கணிப்பீட்டு சபையொன்று நியமிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் உரிய சொத்துக்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் சொத்துக்கள் கணிப்பீடொன்று மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக. | விதி 218 இன் பிரகாரம் சொத்துக்கள் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 பிரிவின் பிரகாரம் பிரதேச சபையால் பயன்படுத்தப்படுகின்ற 25 காணிகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை.. | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரத்தை கையேற்கப்பட வேண்டும். |
| (இ) | காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான குருந்துவத்தவில் அமைந்துள்ள 01 ஏக்கர் 03 ரூட் 05.26 பேர்ச் பரப்பளவு கொண்ட காணியைக் சபைக்கு கையேற்தற்காக, 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி, காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு, சபையால் ரூபா. 9,993,090 செலுத்தியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதியில் அந்த காணியின் உரித்து கையேற்கப்பட வில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 08 பதவிகளில் 10 வெற்றிடங்களும் பதவியொன்றில் 11 மிகைகளும் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை. | ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை முகாமை செய்யப்பட வேண்டும். |